**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**<u>DVC No. 4 /2023</u>**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | **மகாலட்சுமி** | Taluk | |
| Husband Name | **கோபிநாத்** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 23.04.2025** | | | |

**குறுக்கு விசாரணை**

1) நான் 10 ம்வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் 1ம் எதிர்மனுதாரர் அடித்து மூளையில் பிரச்சனை ஏற்பட்டது. வேலை எதுவும் செய்யவில்லை. எத்தனைவருஷம் வரை வேலைக்கு போகவில்லை என்றால் கடந்த 12 வருடங்களாக வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வருகிறேன். 1ம் எதிர்மனுதாரர் அடித்து மூளையில் பிரச்சனை ஏற்பட்டதால் வேலைக்கு செல்லவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் பெயர் நித்திகா என்றால் சரிதான். என் மகள் என்ன படிக்கிறார் என்றால் அரசு கலைகல்லூரியில் பி.எஸ்.சி மூன்றாமாண்டு படித்து வருகிறார்.

2) கடந்த 6 மாதங்களாக 1ம் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து கல்லூரிக்கு சென்று வருகிறார். என் மகன் பெயர் பிரியன் என்றால் சரிதான். மகனும், 1ம் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து கல்லூரிக்கு சென்று வருகிறார். மகன் வீட்டிலிருந்து படிக்கவில்லை என்றும், Hostel ல் தங்கி படிக்கிறார் என்ற விவரம் கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. எனது மகனுக்கு 18 வயது முடிந்துவிட்டது என்றால் 18 நடந்து வருகிறது. என்னுடைய குழந்தைகள் 2 பேரும் 1ம்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

எதிர்மனுதாரர் வீட்டில் இருப்பதால் குழந்தைகளுக்கு சேர்த்து ஜீவனாம்சம் பரிகாரம்கோரியிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் பிரச்சனை செய்ததால் வீட்டை காலி செய்ய வீட்டின் உரிமையாளர் சொன்னார். 1ம் எதிர்மனுதாரர் பிரச்சனை செய்தார் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) மனுவில் குறிப்பிட்டுள்ள வீட்டு முகவரியின் வீட்டு உரிமையாளர் பெயர் என்ன என்றால் ராஜேந்திரன் ஆவார். அவருடைய பையன் பெயர் கண்ணன் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வாடகை 1ம் எதிர்மனுதாரர்தான் செலுத்தி வந்தார் என்றால் என்னுடன் இருந்த 2 மாதங்கள் மட்டும் செலுத்தினார். அதன் பின்பு செலுத்தவில்லை. மேற்படி வீட்டிற்கு வாடகையை 1ம் எதிர்மனுதாரர் மேற்படி கண்ணன் வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2 மாதங்கள் மட்டும் செலுத்தினார். மற்ற மாதங்களில் நான்தான் வீட்டின் உரிமையாளரிடம் வீட்டு வாடகையை கொடுத்தேன். 2 மாதங்கள் எந்தெந்த மாதங்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு என்னுடன் 2 மாதங்கள் குடியிருந்தார். அப்போது கொடுத்தார். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் நான் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்து வீட்டு வாடகையும் கொடுத்து , குடும்ப செலவிற்கு பணம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வீட்டு வாடகை 1ம் எதிர்மனுதாரர் கொடுக்கவில்லை என்று நான் சொல்கிறேனா என்றால் ஆம். என்னிடம் காண்பிக்கப்படும் கண்ணன் வங்கி கணக்கில் 1ம் எதிர்மனுதாரர் வாடகை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதன்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாடகை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள வீட்டிற்கு ஏசி வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. ஏசி இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி ஏசியை நான் தற்போது குடியிருக்கும் வீட்டில் பயன்படுத்தி

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

வருகிறேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தனது தாய் மற்றும் 2 குழந்தைகளுடன் 2ம் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

5) 1ம் எதிர்மனுதாரருடன் பிறந்த சகோதரிகளான அகிலா மற்றும் சரண்யா ஆகியோர் திருமணமாகி அவர்அவர் கணவருடன் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்திற்கு பின்னிட்டுதான் அவர்களது திருமணம் நடந்தது. எனக்கு வாங்கல் SBI மற்றும் கரூர் SBI மெயின் கிளையிலும் வங்கி கணக்கு உள்ளது என்றால் வாங்கல் கிளையில் மட்டும்தான் உள்ளது. கருரில் இல்லை. வாங்கல் SBI வங்கியில் என்னுடைய நகைகள் அடமானத்தில் உள்ளது என்றால் சரிதான். வாங்கல் SBI வங்கியிலும், கரூர் SBI கிளையிலும் நகைகள் அடமானத்தில் உள்ளது என்றால் சரிதான். வருஷம் வருஷம் Renewal செய்வேன் என்றால் சரிதான். என்னுடைய திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தை எனது பெற்றோர்கள் ஏற்று கொள்ளவில்லை என்றால் திருமணத்தன்று வரவில்லை, பின்னிட்டு ஏற்று கொண்டார்கள்.

6) திருமணத்தின்போது நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். திருமண செலவு முழுவதையும் 1ம் எதிர்மனுதாரர் குடும்பத்தினர் தான் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களது குடும்பத்திலும் ஏற்று கொள்ளவில்லை. திருமண செலவை 1ம் எதிர்மனுதாரரின் முதலாளிதான் செய்தார் என்றால் சரிதான். மேற்படி செலவை 1ம் எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று நேர் செய்தார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய திருமணத்தின்போது நான் வரதட்சணை எதுவும் கொண்டு செல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 2 அக்கா ஆவார்கள். என்னுடைய அப்பா இறந்து விட்டார். என்னுடைய அம்மா மற்றும் 2 அக்காக்களிடம் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/−R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.